**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(10.05.2017முதல் 14.05.2017)**

**அறிக்கைஎண் :037/2017** **தேதி:09.05.2017**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 20°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (10.05. 2017 முதல் 14. 05. 2017)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37°செ முதல் 38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 40 முதல் 45 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14-16 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10.05.17 | 0 | 38 | 26 | 5 | 75 | 40 | 16 | தென்கிழக்கு |
| 11.05.17 | 0 | 38 | 26 | 5 | 75 | 40 | 16 | தென்கிழக்கு |
| 12.05.17 | 0 | 38 | 26 | 5 | 75 | 40 | 16 | தென்கிழக்கு |
| 13.05.17 | 0 | 37 | 25 | 5 | 75 | 45 | 14 | தெற்கு |
| 14.05.17 | 0 | 37 | 25 | 5 | 75 | 45 | 14 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால், எள் பயிரை அறுவடை செய்வதை தள்ளி போடவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை மரங்களின் வேரில் சேமிக்கும் வகையில் உள்நோக்கிய வட்டபாத்தியினைசீரமைக்கவும்.
- ✓ அதிக மழையுடன் மணிக்கு 10 கி.மீ க்கு மேல் வேகமான காற்று வீச வாய்ப்புள்ளதால் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். கரும்பில் விட்டம் கட்டவும்.
- ✓ போதிய மண் வெப்பம் நிலவுவதால், மஞ்சள் பயிரிடுவதற்கு நிலம் தயாரித்து விதைப்பு செய்யலாம். மஞ்சள் பயிரின் தேவையை பொறுத்து தாய் கிழங்குகளை விதைப்பதற்கு முன் 100 கிலோ இரும்பு சல்பேட், 50 கிலோ ஜிங் சல்பேட் மற்றும் 1 டன் மக்கிய நாற்கழிவுகளைஅடியுரமாக இடவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ அதிக மழையுடன் மணிக்கு 10 கி.மீ க்கு மேல் வேகமான காற்று வீச வாய்ப்புள்ளதால் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். கரும்பில் விட்டம் கட்டவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**